**மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 2015**

---

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மோட்டார் வாகனப் புகையைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டளையின் கீழ் 2009 திசெம்பர் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட புகை பரிசோதனை நம்பிக்கை பொறுப்பின் 9(ஈ) பந்தி மற்றும் 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 203) 29(ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. திணைக்களத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கரும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டேன்

என நான் நம்புகிறேன்.

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீடு நியமம் - 01

கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவையான போது அல்லது அனுமதி வழங்கப்பட்டது தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட முடியாதிருந்த போதிலும், ரூபா 760,510 தொகையான வங்கி மேலதிகப்பற்று சேமிப்புக் கணக்கின் மீதியுடன் ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07

i. சொத்தொன்று பாவனைக்கு தயார்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்படாமை கொள்கை நிதியத்தினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

ii. கணக்குக் காலப்பகுதியின் இறுதியில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் திரண்ட பெறுமானத்தேய்வு வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரிப் பிணைமுறிகளைக் கொள்வனவு செய்வதனால் ஏற்படுகின்ற இலாபம் அல்லது நட்டத்தை அவை கொள்வனவு செய்யப்பட்.ட ஆண்டின் போதே இலாபம் அல்லது நட்டமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. 2012 முதல் 2014 வரையான ஆண்டுகளில் ஏற்பட்ட நட்டம் ரூபா 6,143,912 தொகை மீளாய்வாண்டில் திரண்ட நிதியத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பிணைமுறிக்குரிய இலாபம் ரூபா 1,836,621 தொகை உரிய ஆண்டின் இலாபமாக

இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கான ஊழியர் பங்களிப்பான ரூபா 281,702 தொகை ஊழியர் சேமலாப செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| (i) 3.2 (ஆ) பந்தி | கொடுப்பனவு செய்வதற்குள்ள பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் மேலதிக பணம் மற்றும் முதிர்ச்சியடைந்த முதலீடுகள் தாமதமின்றி திரட்டு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது தேறியிருந்த ரூபா 381,854,568 தொகையான திறைசேரி உண்டியல்களையும் பயன்படுத்தி ரூபா 514,999,271 தொகைக்கு புதிய திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே மேலும் ரூபா 80,853,558 தொகை வைப்பாக வங்கிக் கணக்குகளில் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது எத்தொகையும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.2(ஈ) பந்தி | ஒவ்வொரு காலாண்டிற்காகவும் நிதியத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அறிக்கை பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 176,143,565 மிகையாக இருந்ததுடன், அதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 126,399,391 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 49,744,174 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டின் போது சர்வதேச மாநாடொன்றிற்காகவும் ஊடகம் மூலம் அறிவிப்பதற்காகவும் ரூபா 46,982,507 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அவ்வாறான செலவினம் மேற்கொள்ளப்படாமை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்தக்களுக்காக பெறுமானத் தேய்வு சீராக்கலின் பின்னர் நிதியத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியான அதிகரிப்பைக் காண்பித்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அது ரூபா 204,524,702 ஆக இருந்தது. வருடாந்தம் பதிவு செய்யப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கையின்

அதிகரிப்பின் காரணமாக இவ்வாறான அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதியத்தின் மீளாய்வாண்டின் விரைவு விகிதம் 8547:1 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் போது 235:1 ஆகும். அதன் பிரகாரம் நிதியம் அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தைவிட அதிகமான தொழில்படு மூலதனத்தைப் பேணிச் சென்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) நிதியத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளாக,

* செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்குவதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் செயற்திட்ட அலுவலகமொன்றைப் பேணிச் செல்லல்,

* செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்,

* பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் பரிசோதனை உபகரணங்களை வழங்குதல்,

* நிகழ்ச்சித்திட்டத்தை வினைத்திறனானதாக அமுல்படுத்துவதற்குத் தேவையான பதவியணியின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்,

* பரிசோதனை மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டத்தை வினைத்திறனானதாக அமுல்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குதலும் அபிவிருத்தி செய்தலும்,

* வாகன முகாமைத்துவம் மற்றும் வீதி பாதுகாப்புக்களின் மூலம் நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான வசதிகளை அபிவிருத்தி செய்தலும், சுகாதார அனர்த்தங்களை குறைப்பதற்கும், பொதுமக்களின் உயிர்வாழும் நிலையை மேம்படுத்துவதற்கும் வளியின் தன்மையை அபிவிருத்தி செய்வதற்காகவும் செயற்பாடுகளை நடாத்துதலும் மேற்பார்வை செய்தலும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வளிமாசடைதல் ஏற்பட்டுள்ள துறைகள் மற்றும் பிரதேசங்களை இனங்காண்பதற்கு நிதியத்தினால் நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், சுகாதார அனர்த்தங்களை குறைப்பதன் மூலம் பொது மக்களின் உயிர்வாழும் நிலையை முன்னேற்றுவதற்கு வளியின் தன்மையை அபிவிருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ‘‘எம்பியன்ட் எயார் கொலிட்டி’’ (Ambient Air Quality) செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட சேவைக்காக பேராதனை பல்கலைக்கழகத்துடன் ரூபா 16,195,000 தொகையான சேவை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகையில் ரூபா 8,000,000 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் நிதியத்தின் இணக்கப்பாட்டுடன்

பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக நிதியத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அரையாண்டு ரீதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயல்முன்னேற்ற அறிக்கையும் குறிப்பிட்ட காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நாட்டில் நடாத்தப்பட்ட மொத்த புகைப் பரிசோதனை நிலையங்களின் எண்ணிக்கை 384 ஆக இருந்ததுடன் அதில் 75 அல்லது 20 சதவீத அளவில் புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மூலம் பரீட்சிக்கப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 15 நிலையங்களின் முழுமையாகவோ அல்லது அரையாகவோ இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அது பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையங்களில் 20 சதவீதமாகும். அதன் பிரகாரம் பரிசோதனைக்குட்படுத்தப்படாத நிலையங்களிலிருந்து வழங்கப்பட்ட புகைப்பரிசோதனை சான்றிதழ்களின் நம்பகத்தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது புகைப்பரிசோதனை மேற்கொள்கின்ற 02 தனியார் நிறுவனங்களினால் 3,731,629 வாகனங்களுக்காக புகைப்பரிசோதனைச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அதில் புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மூலம் மீளாய்வாண்டின் போது 5,391 புகைப்பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது 0.14 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் புகைப்பரிசோதனை நடவடிக்கைகளின் சரியான தன்மை தொடர்பாக புகைப்பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வீதிப் போக்குவரத்தில் புகைப்பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 3,160 வாகனங்களில் 713 உரிய நியமத்தில் இல்லாதிருந்தமை கண்டறியப்பட்டிருந்தது. அந்த 713 வாகனங்களில் 62 இற்கு மீண்டும் புகைப்பரிசோதனைக்காக முன்வராதிருந்ததுடன் உரிய வாகனங்களுக்கு மீளாய்வாண்டின் வருமான அனுமதிப்பத்திரம் மாத்திரம் புகைப்பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டு வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே நிறுத்தி வைக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்காமையினால் உரிய வாகன உரிமையாளர்களுக்கு முறையற்றவகையில் மீண்டும் வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புகைப்பரிசோதனைச் சான்றிதழ் விநியோகிக்கின்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு போதியளவான வேலைத்திட்டமொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

நிதியத்தின் 05 செலவின விடயங்களில் பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 82 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

நிதியத்திற்காக பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 211,780,000 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2006 மார்ச் 26 ஆந் திகதிய 28 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அதற்காக வருடாந்த கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக நிதியத்திற்கு ரூபா 226,740,603 தொகையான வருமானம் கிடைத்திருந்ததுடன் ரூபா 50,597,038 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் திறைசேரியின் முகாமைத்தவ மற்றும் கணக்காய்வு திணைக்களத்தால் 2009 யூன் 09 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் DMA/2009(1) இன் ஆலோசனைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் நலிவுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குச் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களையும், கணக்கீட்டுத் தத்துவங்களையும் பின்பற்றுவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.